### அசம்பாவித செயல்களில் ஈடுபட முயற்சியா?

# கோவையில் பதுங்கியிருந்த ஐ.எஸ் தீவிரவாதி கைது

■ உ.பி. போலீஸ் அதிரடி

■ இன்ஸ்டா, செயலி மூலம் நெட்வொர்க்கை உருவாக்கியது அம்பலம்

**கோவை, செப்.18:** கோவையில் பதுங்கியிருந்த ஐ.எஸ். தீவிரவாதியை உத்தரப்பிரதேச மாநில போலீசார் அதிரடியாக கைது செய்தனர். இவர், இன்ஸ்டா மற்றும் புதிய செயலி மூலம் நெட்வொர்க்கை உருவாக்கியது அம்பலமாகி உள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் சித்தார்த் நகர் மாவட்டம் மாத்வாபூர் பகுதியை சேர்ந்தவர் அப்துல் குத்தூஸ். இவரது மகன் மக்சூத் அலி (19). இவர், கோவை பீளமேடு ஹோப் காலேஜ் பகுதியில் ஒரு ஓட்டலில் தங்கியிருந்தார். நேற்று முன்தினம் பெங்களூரு செல்வதற்கு தயாராக இருந்தபோது அவரை உத்தரபிரதேச மாநிலம் லக்னோ காவல்துறையின் தீவிரவாத தடுப்பு பிரிவு போலீசார் மற்றும் தமிழக போலீசார் இணைந்து, மடக்கி பிடித்தனர்.

உ.பி மாநிலத்தின் ஆசம்கர் பகுதியை சேர்ந்த சந்தேக நபரான முகமது நபீல் என்பவரை கடந்த 12ம் தேதி அம்மாநில போலீசார் அங்கு கைது செய்யப்பட்டார். இவரிடம் நடத்திய விசாரணையில் ஐ.எஸ்.தீவிரவாத அமைப்புக்கு ஆதரவாக செயல்பட்டு வந்தது தெரிந்தது. இவர் அளித்த தகவலின் அடிப்படையில் கூட்டாளியான மக்சூத் அலியும் போலீசார் மடக்கி பிடித்து உள்ளனர். மக்சூத் அலி, தடை செய்யப்பட்ட ஐஎஸ்ஐஎஸ் அமைப்பின் தீவிர ஆதரவாளர் என்பதும், ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாத அமைப்பின் ஆன்லைன் செயல்பாட்டு குழுவில் இடம்பெற்றிருந்ததும் தெரிந்தது. பல்வேறு ஆதாரங்களின் அடிப்படையில் இரவோடு இரவாக மக்சூத் அலியை கைது செய்து உத்தரபிரதேச மாநிலம் லக்னோவுக்கு போலீசார் அழைத்துச் சென்றனர்.

▶ மக்சூத் அலி

முன்னதாக, இவரிடம் கோவை தீவிரவாத தடுப்பு பிரிவு போலீசார் விசாரணை செய்தனர். இதுகுறித்து போலீசார் கூறியதாவது: அப்போது, பெங்களூருவை சேர்ந்த சபிகுல் என்பவர் நடத்தி வரும் மனிதவள நிறுவனத்தில் மக்சூத் அலி பணியாற்றி வந்தார். பீகார் மாநிலத்தை சேர்ந்த சபிகுல், சிலருடன் சேர்ந்து கடந்த செப்டம்பர் 7ம் தேதி கோவை வந்துள்ளார். பீளமேடு கொடிசியா வர்த்தக கண்காட்சி வளாகத்தில் பணிபுரிவதற்காக வந்ததாக கூறி ஓட்டலில் தங்கியிருந்து உள்ளனர்.

மக்சூத் அலி, 'முஸ்லிம் வாரியார்' என்ற பெயரில் இன்ஸ்டாகிராம் துவக்கி, நடத்தி வந்து உள்ளார். "கேப்டன் எம் நெட்வொர்க்" என்ற செயலியையும் உருவாக்கி உள்ளார். ஒரே தளம், ஒரே நோக்கம், ஒற்றுமை, திட்டம் மற்றும் செயல்பாடு என்பதே இதன் குறிக்கோளாக இருக்கிறது. இந்த செயலி, இளைஞர்களை தீவிரவாத சிந்தனைக்கு தூண்டுவதற்கு பயன்படுத்தப்பட்டு உள்ளது. மக்சூத் அலி, பாகிஸ்தானை சேர்ந்த ஹேக்கர்களுடன் தொடர்பில் இருந்து உள்ளார். ஹேக்கிங் கருவிகளை உருவாக்க முயன்று உள்ளார். இணையவழி ஆதாரங்கள் மூலம் பைதான், ஜாவா, கோடிங் மற்றும் ஹேக்கிங் திறன்களை கற்றுக்கொண்டுள்ளார். இவ்வாறு போலீசார் தெரிவித்தனர்.

தீவிரவாத அமைப்புடன் மக்சூத் அலி தொடர்பில் இருந்தது உறுதியாகி உள்ளதால், அவர் கோவையில் தங்கியிருந்த நாட்களில் யார், யாரை சந்தித்தார்? கோவையில் தீவிரவாத கும்பல் ஊடுறுவி இருக்கிறதா? இன்ஸ்டாகிராம் மூலமாக தீவிரவாத கும்பலுக்கு உறுப்பினர் சேர்ப்பு பணி நடந்ததா? என போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மக்சூத் அலியின் கூட்டாளிகள் குறித்த விவரங்களையும், கோவையில் அவரின் தொடர்பு குறித்தும் உ.பி போலீசாரிடம் கோவை தீவிரவாத தடுப்பு பிரிவு போலீசார் கேட்டுள்ளனர். கைதான மக்சூத் அலியும், அவரது கூட்டாளிகளும் ஒன்றுசேர்ந்து கோவையில் விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு ஏதேனும் அசம்பாவித செயல்களில் ஈடுபட முயற்சி செய்தார்களா? என்பது குறித்தும் புலனாய்வு பிரிவு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். கோவையில் ஏற்கனவே கார் குண்டு வெடிப்பு சம்பவம் நடத்தப்பட்டது. இதுதொடர்பாக என்ஐஏ அதிகாரிகள் விசாரணை நடத்தி வரும் நிலையில், தற்போது தடை செய்யப்பட்ட அமைப்பை சேர்ந்த ஒருவர் கோவையில் கைது செய்யப்பட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

## உறக்கத்தில் உளவுத்துறை

கோவை மாநகரில் என்ஐஏ (தேசிய புலான்ய்வு முகமை), ஐபி (உளவுத்துறைப் பணியகம்), ஏடிஎஸ் (தீவிரவாத தடுப்பு பிரிவு), எஸ்ஐயு (சிறப்பு விசாரணை பிரிவு), ஐஎஸ் (மாநில உளத்துறை), சிபிசிஐடி போன்ற பல்வேறு உளவுப்பிரிவுகள் மூலமாக தீவிரவாத கும்பல் நடமாட்டம் கண்காணிக்கப்படுகிறது. வெளிமாநிலங்களில் இருந்து கோவைக்கு வரும் நபர்கள், குறிப்பாக குற்றச்செயல் தொடர்பான நபர்களை கண்காணிக்கும் சிஸ்டம் அமலில் உள்ளது. ஆனால், இது தீவிரமாக செயல்படுவதாக தெரியவில்லை. வெளிமாவட்டம், வெளிமாநில குற்றவாளிகள், தேடப்படும் நபர்கள் குறித்த ஒருங்கிணைப்பு உளவுப்பிரிவு போலீசாரிடம் இல்லை. பல்வேறு தீவிரவாத நபர்கள் கோவையில் பதுங்கி இருப்பதாக தெரிகிறது. ஆனால், இவர்களை கண்காணிக்காமல், "23ம் புலிக்கேசி படம் பாணியில்" உளவுப்பிரிவு போலீசார் அலட்சியம் காட்டி வருகின்றனர். லக்னோ போலீசார் கோவை வந்து இறங்கிய பிறகே, இங்குள்ள உளவுத்துறை விழித்துக் கொண்டுள்ளது. ஏற்கனவே, கொலை நகரமாக மாறி வரும் கோவையில், தீவிரவாத கும்பல் ஊடுருவல்களை தடுக்க, உளவுப் பிரிவு போலீசார் முனைப்பு காட்ட வேண்டும் என்கிற வலுவான கோரிக்கை எழுந்துள்ளது.

---

# சிவகங்கையில் இரட்டைக்கொலையை கண்டித்து 3 மணிநேரம் மக்கள் மறியல்

■ உடலை பெற உறவினர்கள் மறுப்பு

■ 5 பேர் கைது

**சிவகங்கை, செப். 18:** சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் அருகே காயாஓடை புதுக்குடியிருப்பை சேர்ந்தவர் தெய்வேந்திரன் (27). காளையார்கோவில் அருகே சிறுவேலங்குடியை சேர்ந்தவர் பூப்பாண்டி (25). இருவரையும் நேற்று முன்தினம் சிவகங்கை அருகே பையூர் பகுதியில் உள்ள கொடிக்காடு கண்மாய்க்குள் 10க்கும் மேற்பட்டோர் அடங்கிய கும்பல் ஓட ஓட விரட்டி கொடூரமாக வெட்டி கொலை செய்தது. இதுதொடர்பாக இந்த கொலை சம்பவத்தில் ஈடுபட்டதாக சிவகங்கை அருகே பில்லூரை சேர்ந்த பாலமுருகன் (24), தன்ராஜ் (19), சந்தோஷ் (19), மாத்தூரை சேர்ந்த சதீஷ்குமார் (25), அழுபிள்ளைதாங்கி கிராமத்தை சேர்ந்த காளீஸ்வரன் (23) ஆகிய 5 பேரை போலீசார் நேற்று கைது செய்தனர். இந்நிலையில் தெய்வேந்திரன் மற்றும் பூப்பாண்டி இருவரின் உறவினர்கள் மற்றும் கிராமத்தினர் நேற்று சிவகங்கை அரண்மனை வாசல் முன்பு சாலை மறியல் போராட்டம் நடத்தினர். இறந்தவர்கள் குடும்பத்திற்கு தலா ரூ.1 கோடி வழங்க வேண்டும், அரசு வேலை வழங்க வேண்டும். கொலைக்கான உண்மையான காரணத்தை கண்டறிய வேண்டும். குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 3 மணிநேரம் நடைபெற்ற சாலை மறியலால் நகர் முழுவதும் பஸ்கள், கார்கள் உள்ளிட்ட வாகனங்கள் செல்ல முடியாமல் கடுமையான போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. கோரிக்கைகள் குறித்த அரசின் முடிவிற்கு பின்னரே இறந்தவர்களின் உடல்களை பெற்றுக்கொள்வது குறித்து முடிவெடுக்கப்படும் என குடும்பத்தினர் தெரிவித்தனர். இதனால் நேற்று உடல்களை குடும்பத்தினர் பெற்றுக்கொள்ளவில்லை.

---

**பணியாளர் தேர்வு ஆணையம் (தெற்கு மண்டலம்), சென்னை**
**இந்திய அரசு**

**குறுகிய அறிவிப்பு**

பணியாளர் தேர்வு ஆணையம் (SSC), இந்திய அரசாங்கத்தில் உள்ள பல்வேறு இளநிலை பொறியாளர் பணியிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்காக கணினி வழித் தேர்வு (CBE) முறையில் நடத்தப்படும் 2026 ஆம் ஆண்டுக்கான திறந்த போட்டி இளநிலை பொறியாளர் தேர்வு மூலம், விண்ணப்பங்களை வரவேற்கிறது. தகுதி நிபந்தனைகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் போன்றவற்றுடன் கூடிய விரிவான அறிவிப்பு ssc.gov.in என்ற இணையதளத்தில் உள்ளது.

2. பெண் விண்ணப்பதாரர்கள் மற்றும் பட்டியல் சாதியினர் (SC), பழங்குடியினர் (ST), முன்னாள் ராணுவத்தினர் (ESM), மாற்றுத்திறனாளிகள் (PwBD) ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்குக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

3. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் 02.09.2026 முதல் 22.09.2026 (23:00 மணி வரை) வரை ஆணையத்தின் இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

**மண்டல இயக்குநர்,**
**எஸ்எஸ்சி (எஸ்ஆர்), சென்னை**

**CBC 32203/11/0012/2627**

---

**No.25103/LAD/PPS/P2/2026**
**GOVERNMENT OF PUDUCHERRY**
**LOCAL ADMINISTRATION DEPARTMENT**

Puducherry, dated 17.09.2026

**ADVERTISEMENT**

Sub : LAD - PPS - Conduct of Elections to Municipalities and Panchayats - Appointment of State Election Commissioner - Applications invited - Reg.

Applications with full Bio-data and a recent passport size photograph are invited from eligible persons for appointment as State Election Commissioner for the purpose of conduct of elections to Municipalities and Panchayats in the Union Territory of Puducherry.

| Sl. No. | Particulars | Details |
|---|---|---|
| 1 | Eligibility | State Election Commissioner shall be appointed from amongst persons, who served under the Government of Union, or under the Government of a State or Union territory for not less than twenty-five years, having knowledge and experience in conducting elections |
| 2 | Age Limit | 65 years as on the last date prescribed for receipt of applications. |
| 3 | Term of Office | Three (3) years from the date on which he/she assumes office or till he/she attains the age of 68 years, whichever is earlier. |
| 4 | Pay | Level-12 (Rs.78,800 - Rs.2,09,200) in the Pay Matrix. Pay shall be regulated in accordance with the Puducherry State Election Commissioner (Conditions of Service and Tenure of Office) Rules, 1994, as amended from time to time. |
| 5 | Other Conditions of Service | Details regarding conditions of service, tenure and other relevant particulars are available on the website of the Local Administration Department, Government of Puducherry. |
| 6 | Last Date for Receipt of Applications | Thirty (30) days from the date of publication of this advertisement. |
| 7 | Address for Submission of Applications | The Secretary to Government (Local Administration), Chief Secretariat, Puducherry -605 001. |

**The application shall be accompanied by:**

1. Detailed Bio-data/Curriculum Vitae;
2. Passport size photograph;
3. Proof of Date of Birth;
4. Copies of educational qualifications;
5. Copies of service records indicating positions held;
6. Copy of retirement order, wherever applicable; and
7. A brief note indicating experience in election administration, electoral management, public administration or related fields.

Applications received after the prescribed date or found incomplete in any respect are liable to be rejected.

Soft copy of the application may additionally be forwarded by **e-mail to: dirlad@py.gov.in.** However, submission of e-mail copy shall not dispense with submission of the signed application in physical form within the prescribed time.

The Government of Puducherry reserves the right to accept or reject any application and to cancel or modify the selection process at any stage without assigning any reason.

**//By Order of the Lieutenant Governor//**

DIRECTOR
**LOCAL ADMINISTRATION DEPARTMENT**

**No.205/DIP/AD(Press)/2026-27**

---

### மதுரை மாணவன் ஆணவக் கொலை சர்ச்சை

# சிசிடிவி, ஆடியோ பதிவை ஆய்வு செய்ய ஐகோர்ட் கிளை உத்தரவு

**மதுரை, செப். 18:** மதுரை கூடல்நகரை சேர்ந்த யோகலெட்சுமி - கருப்பசாமி தம்பதியின் மகன் தமிழ்ச்செல்வன் (16). 11ம் வகுப்பு படித்தார். கடந்த செப். 6, ஞாயிறு விடுமுறையன்று கிரிக்கெட் விளையாட சென்ற தமிழ்ச்செல்வனை, மதுரை ஆனையூர் கழிவுநீரேற்று நிலையம் அருகே முட்புதர் பகுதியில் மறுநாள் காயங்களுடன் போலீசார் சடலமாக மீட்டனர். சந்தேக மரணம் என வழக்குப்பதிந்து போலீசார் விசாரிக்கும் நிலையில், மாணவர் உடலை வாங்க மறுத்து மதுரை அரசு மருத்துவமனை பிணவறையில் உடல் வைக்கப்பட்டுள்ளது.

மாணவர் ஒரு மாணவியுடன் நட்பு முறையில் பேசியதால், மாணவி தரப்பினர் ஆணவக் கொலை செய்திருக்கலாம் என தமிழ்ச்செல்வன் தரப்பினர் குற்றம் சாட்டுகின்றனர். பிரேத பரிசோதனை அறிக்கையில், மாணவர் மார்பில் காயத்துடன், கால்களில் சிராய்ப்புகள் இருப்பது தெரியவந்துள்ளது.

இந்நிலையில் தமிழ்ச்செல்வனின் தாய் யோகலட்சுமியிடம், தமிழ்ச்செல்வனை சிலர் அடித்துக் கொன்றதாக அவரது நண்பர் ஒருவர் பேசும் ஆடியோ சமூக வலைத்தளங்களில் வைரலானது.

இந்நிலையில், மாணவர் தமிழ்ச்செல்வனின் தாய் யோகலெட்சுமி, ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில், "எனது மகன் தமிழ்ச்செல்வன், செப். 6ம் தேதி நண்பர்களுடன் விளையாடச் சென்ற நிலையில் மாலை வரை வீடு திரும்பவில்லை. இதனால், கூடல்புதூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். மறுநாள், அருகிலுள்ள குளத்தில் தமிழ்ச்செல்வனின் உடல் மிதந்த நிலையில் மீட்கப்பட்டது. சில நபர்கள் தமிழ்ச்செல்வனை தாக்கி குளத்தில் வீசியதாக தகவல் கிடைத்தது. இதுதொடர்பான ஆடியோ பதிவுகள் உள்ளிட்டவற்றை காவல்துறையிடம் வழங்கியும், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, எனது மகனின் மரணம் தொடர்பான வழக்கின் விசாரணையை வேறு விசாரணை அமைப்புக்கு மாற்றவும், அதுவரை காவல்துறை இந்த வழக்கை விசாரிக்க இடைக்காலத் தடை விதித்தும் உத்தரவிட வேண்டும்" என்று கூறியிருந்தார்.

இந்த மனுவை நேற்று விசாரித்த நீதிபதி விஜயகுமார், சம்பந்தப்பட்ட சிசிடிவி பதிவுகளை பாதுகாக்க வேண்டும். இறந்த மாணவரின் நண்பன், மாணவரின் தாயாருடன் பேசிய ஆடியோவை போலீசார் ஆய்வு செய்ய வேண்டுமென உத்தரவிட்டு விசாரணையை வரும் 24ம் தேதிக்கு தள்ளி வைத்தார்.

---

# தாராபுரத்தில் ரூ.1.40 கோடி தங்கம் பறிமுதல்

**தாராபுரம், செப். 18:** தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு பறக்கும் படையினர் நேற்று மூலனூரில் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, கோவையை சேர்ந்த நகை பட்டறை அதிபர் சிலோக்சன் (50) வந்த காரை சோதனை செய்தனர். அதில், உரிய ஆவணங்களின்றி கொண்டு வரப்பட்ட ரூ.1.40 கோடி மதிப்புள்ள 1 கிலோ 15 கிராம் எடையுள்ள தங்க நகைகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

---

**தேசிய தோட்டக்கலை வாரியம்**

வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம்,
இந்திய அரசு, 85, இன்ஸ்டிடியூஷனல் ஏரியா, செக்டர்–18,
குருகிராம்–122015

**மனிதவள முகமையை அமர்த்துவதற்கான முன்மொழிவு கோரிக்கை அறிவிப்பு**

1. தேசிய தோட்டக்கலை வாரியம் (NHB), "தொகுப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்குத் துறைசார் நிபுணர்/வல்லுநரை வழங்குவதற்காக ஒரு மனிதவள நிறுவனத்தை ஈடுபடுத்துதல்" என்ற பணிக்காக, தகுதியான நிறுவனங்களிடமிருந்து GeM இணையதளம் வழியாக இணையவழி ஏலங்களை வரவேற்கிறது.
2. விரிவான RFP ஆவணம், தகுதி நிபந்தனைகள் மற்றும் ஏல அட்டவணை ஆகியவை GeM போர்ட்டலில் கிடைக்கின்றன (ஏல எண்: GEM/2026/B/8039423).
3. விருப்பமுள்ள ஏலதாரர்கள், தங்களது உரிய விவரங்களுடன், ஏலங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதியான 06.10.2026 (மாலை 5:00 மணி) அன்று அல்லது அதற்கு முன்னர், GeM வழியாக மட்டுமே இணையவழியில் ஏலங்களைச் சமர்ப்பிக்கலாம்.
4. விண்ணப்பத்தை நேரடியாகவோ அல்லது வேறு எந்த வகையிலோ சமர்ப்பிப்பது ஏற்றுக்கொள்ளப்படாது.
5. முன்–ஏலக் கூட்டம் 25.09.2026 அன்று (காலை 11:30 மணிக்கு) கலப்பு முறையில் நடைபெறும். கூட்டத்திற்கான இணைப்பு RFP ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ளது.
6. மேலும் ஏதேனும் விளக்கங்கள் தேவைப்பட்டால், விண்ணப்பதாரர்கள் ravindra.dangi93@gov.in மற்றும் clusters.nhb@gov.in ஆகிய மின்னஞ்சல் முகவரிகளுக்கு எழுதலாம்.

ஒம்/–
(டாக்டர். விஜய் குமார் டோஹரே)
துணை நிர்வாக இயக்குநர்

தேதி: 18.09.2026
இடம்: குருகிராம்

**CBC 01113/11/0005/2627**

---

**GOVERNMENT OF INDIA – DEPARTMENT OF SPACE**
**CONSTRUCTION & MAINTENANCE GROUP, SDSC – SHAR**
**SRIHARIKOTA – 524124**

**Brief E-TENDER NOTICE**

**e-Tender Notice No.CMG/C/CON/268720** **Date: 15/09/2026**

On behalf of President of India, EPC tenders are invited through e-tendering for the following work:

| Brief Name of work | Est. Value (Rs) |
|---|---|
| Package - 3 Construction of Road Top Coat (DBM & BC) in EPC Mode-III at SLC, Tuticorin. | 612 Lakhs |

Last date for sale (Tender documents can be downloaded) up to **01/10/2026**, **14:30 hrs**. For eligibility criteria and other details, interested tenderers may please refer to the detailed bilingual (Hindi-English) Notice Inviting Tenders (NIT) on the website https://www.isro.gov.in/Tenders.html and tender free view at https://www.tenderwizard.com/isro

**Sd/- GROUP HEAD, CMG/ SDSC SHAR**

---

**சிஎஃப்எம் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்**

**பதிவு அலுவலகம்:** பிளாக் எண் A/1003, மேற்கு வாயில், ஒய்எம்சிஏ கிளப் அருகில், சர் எண் 835/1+3, எஸ்.ஜி. நெடுஞ்சாலை, மகர்பா, அகமதாபாத்–380051 குஜராத்.
**கார்பரேட் அலுவலகம்:** முதல் தளம், வேக்ஃபீல்டு இல்லம், ஸ்பிராட் சாலை, பல்லார்டு எஸ்டேட், மும்பை–400038
**மின்னஞ்சல்:** info@cfmarc.in, sweta.rana@cfmarc.in, anmol.mishra@cfmarc.in
தொடர்புக்கு: 022–40055282

thoughtful regeneration
**CIN: U67100GJ2015PTC083994**

**பிற்சேர்க்கை-IV-A**
**[விதி 8(6) விதிமுறையை காண்க]**
**அசையாச் சொத்துகள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.**

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாக மேலும் கடன்தாரர்/(கள்) மற்றும் ஜாமீன்தாரர்/(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே–விவரிக்கப்பட்ட அசையாச் சொத்துகள் (கடனீட்டு சொத்துகள்) கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம் வைக்கப்பட்டது, சிஎஃப்எம் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்டின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வ சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது. கடனீட்டுச் சொத்தானது கடன்தாரர் சொக்கநாதன் M (என்கிற) M சொக்கநாதன் மற்றும் சங்கீதா G ஆகியோரிடமிருந்து கடனீட்டு கடனீந்தோருக்குரிய 08.09.2026 தேதி நிலுவை கடன் கணக்கு எண்.HHLPOR00290677 இன்படி ரூ.53,43,829/– (ரூபாய் ஐம்பத்து மூன்று லட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து எண்ணூற்று இருபத்து ஒன்பது மட்டும்) அதற்கான மேற்கொண்டு 09.09.2026 தேதியிலிருந்து வட்டி மற்றும் பிற செலவுகள், கட்டணங்கள் மேலும் செலவினங்களுடன் மீட்பதற்காக **"உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", "உள்ளது எதுவோ அது மேலும் உதவிசாரா அடிப்படையில்" 06.10.2026** தேதியன்று 05.00 P.M முதல் 6.00 P.M அது சிஎஃப்எம் அசெட் ரீகன்ஸ்டரக்சன் பிரைவேட் லிமிடெட் (அதன் திறனுக்கு உட்பட்ட வகையில் சிஎஃப்எம்ஏஆர்சி பொறுப்பாட்சி–1 IHFL இன் கீழ் செயல்படும் கடனீட்டு கடனீந்தோர் நிறுவனம்) மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது.
சொத்துகளின் நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத் தொகை ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| **கடனீட்டுச் சொத்துகளின் விவரம்:** | மனை எண்.128, சர்வே எண்.305/4 & 305/5, அங்கீகரிக்கப்பட்ட டிடிசிபி லேஅவுட் எண்.11/2016 இன்படி உருவாக்கப்பட்ட காசா கிராண்ட், நயப்பாக்கம் கிராமம், திருவள்ளூர்–602105. திருவள்ளூர் வட்டம் மற்றும் மாவட்டத்தில் அமைந்துள்ள 2347 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள காலி மனை உள்ள சொத்து. அதில் கூறப்பட்ட மனையின் **எல்லைகள் பின்வருமாறு: வடக்கில்:** 9.15 மீட்டர் அகல சாலை, தெற்கில்: மனை எண்.129, கிழக்கில்: 9.15 மீட்டர் அகல சாலை, மேற்கில்: சர்வே எண்கள்: 305/5 & 305/4. **அளவீடு:** வடக்கு: 55 அடி 1 அங்குலம், தெற்கு: 60 அடி, கிழக்கு: 33 மீட்டர் 8 அங்குலம், மேற்கு: 40 அடி வடகிழக்கு: 7 அடி. மொத்தம் 2347 ச.அடி. |
| **கடனீட்டு கடன்:** | 08.09.2026 தேதி நிலுவை கடன் கணக்கு எண். HHLPOR00290677 இன்படி **ரூ.53,43,829/–** (ரூபாய் ஐம்பத்து மூன்று லட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து எண்ணூற்று இருபத்து ஒன்பது மட்டும்) அதற்கான பணத்தை இறுதியாக திருப்பிச் செலுத்தும் காலம்வரையிலான வட்டி மற்றும் பிற செலவுகள், கட்டணங்கள் உட்பட. |
| **நிர்ணய விலை (ரூ):** | ரூ.29,00,000/– (ரூபாய் இருபத்தொன்பது லட்சம் மட்டும்) |
| **பார்வையிடல்:** | கேட்டுக் கொண்டபடி பார்வையிடல் |
| **மின் ஏலம் நேரம்: தேதி: இடம்:** | **மின் ஏலம்/ஏலம் கேட்பது இணையதளம் (www.auctionfocus.in) மூலமாக தேதி: 06.10.2026, நேரம்: 05:00 PM முதல் 06.00 வரை** |
| **ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் & நேரம்:** | **06.10.2026 ஆம் தேதி 3:00 PM அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ.** |
| **முன்வைப்புத் தொகை:** | ரூ.2,90,000/–(ரூபாய் இரண்டு லட்சத்து தொன்னூறாயிரம் மட்டும்) |
| **தொடர்புக்கு:** | **0124–6910910, +91 7065451024** |

**வில்லங்கள் ஏதேனும்: கடனீட்டு கடனீந்தோரால் அறியப்படவில்லை**
மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான தங்கள் ஏலப்புள்ளிகளை சமர்ப்பிக்கும் முன்பு விற்பனை தொடர்பான விரிவான விதிமுறைகள் & நிபந்தனைகளுக்காக மற்றும் சம்பந்தப்பட்ட சொத்துகளின் மின் ஏலம்/விற்பனை தொடர்பாகவும் இதர விவரங்களுக்காகவும் கடனீட்டுக் கடனீந்தோர் இணையதளம் அதாவது **https://www.cfmarc.in** –இல் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும். மேலும் ஏலதாரர்கள் இணையதளம் **www.auctionfocus.in** காணலாம் அல்லது **தொடர்பு எண்கள்: 0124–6910910, +91 7065451024** இல் மற்றும் **மின்னஞ்சல்: auctionhelpline@sammaancapital.com.com** மூலம் தொடர்பு கொள்ளலாம்.

நாள்: 16.09.2026
இடம்: திருவள்ளூர்

ஒம்/–அதிகாரப்பூர்வ அதிகாரி
சிஎஃப்எம் அசெட் ரீகன்ஸ்டரக்சன் பிரைவேட் லிமிடெட்
சிஎஃப்எம்ஏஆர்சி பொறுப்பாட்சி – 1 IHFL பொறுப்பாளராக செயல்படுவது.

---

**வட கிழக்கு ரயில்வே**

**திருத்தம்**

**இணையதளம்: www.ner.indianrailways.gov.in**
**தேதி: 16–09–2026**

28–08–2026 அன்று முடிவடையும் டெண்டர் எண். 30260524 மற்றும் 31.07.2026 தேதியிட்ட டெண்டர் அறிவிப்பு எண்.08 (இனம் எண்.45) ஆகியவற்றோடு தொடர்புடைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள திருத்தம் இதன்மூலம் செய்யப்படுகிறது.

**இனம் எண்.45** பொருள் விவரம்: டெண்டர் திறக்கும் தேதி மற்றும் நேரம், **ஏற்கெனவே உள்ள பதிவு:** 28–08–2026 11 :30 am, **திருத்தப்பட்டது:** 28–09–2026 11 :30 am.

பொருள் விவரம்: விவரம்: ஏற்கெனவே உள்ள பதிவு: ஏற்கெனவே உள்ளது, திருத்தப்பட்டபடி: MDL (மாடுலர்) OVM (ஓவர் வோல்டேஜ் மாட்யூல்) 3 கட்டம், பகுதி எண்.A057E698, ஸ்டாம்போர்ட் தயாரிப்பு ஆல்டர்னேட்டருக்கு ஏற்றது.

விவரத்தை IREPS இணையதளத்தில் பார்க்கலாம். மற்ற அனைத்து விதிமுறைகளும் நிபந்தனைகளும் மாறாமல் இருக்கும். **குறிப்பு:** மேற்கண்ட தகவல்களை வடகிழக்கு ரயில்வேயின் இணையதளமான **www.ner.indianrailways.gov.in** மற்றும் இந்திய அரசின் இணையதளமான **www.tenders.gov.in** ஆகியவற்றில் காணலாம்.

முதன்மை தலைமை மெட்டீரியல் மேனேஜர்
CPRO/S-61 கோரக்பூர்

கூரை மற்றும் படிக்கட்டுகளின் மீது ஒருபோதும் பயணிக்காதீர்கள்

---

**OMKARA**
**ASSETS RECONSTRUCTION PVT LTD.**

**ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்**

CIN No.U67100TZ2014PTC020363
கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47 ஆவது தளம், என்.சி.கெல்கர் மார்க், ஆர்.ஜி.கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை – 400028.
பதிவு அலுவலகம்: எண்.9, எம்.பி.நகர், முதல் தெரு, கொங்குநகர் விரிவாக்கம், திருப்பூர்–641607.
மின்னஞ்சல்: vm.divakaran@omkaraarc.com,
அதிகாரப்பூர்வ அதிகாரி கைபேசி எண்: + 91 93446 84194/+91 98840 62068/9962333307

**[பிற்சேர்க்கை-IV-A] [விதி 8(6) & 9(1) விதிகளை காணவும்]**
**அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு**

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு
இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் ஆனது கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (ஓஏஆர்பிஎல்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருப்பது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (ஓஏஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 33/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்பட்டு) எடெல்வீஸ் வீட்டுவசதி நிதி லிமிடெட் (உரிமையீந்தோர்) வசமிருந்து 30.03.2021 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஓஏஆர்பிஎல் உரிமையீந்தோரின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும் நிலுவைகளை மீட்க மற்றும் கடனீட்டினை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஓஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மீட்பதற்காக கீழேக் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உப–கடன்தாரர்(கள்) வசமிருந்து கடனீட்டுக் கடனீந்தோராக ஓஏஆர்பிஎல்–க்குரிய நிலுவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "முறையீடுசாரா அடிப்படை"யில் சர்பாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிமுறைகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சொத்து விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள், கடனீடுகள், உரிமையாளர், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு நாள், சுவாதீனம் நாள், நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), பார்வையிடும் நாள் & நேரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

கடன்தாரர் / உப கடன்தாரர் பெயர் திரு.S.செந்தில்குமார் & திருமதி. அம்பிகாவதி

**கடனீட்டுச் சொத்து விவரங்கள்– கொன்னூர் சார்பதிவு அலுவலக** 22.06.2018 தேதியிட்ட ஆவண எண்.2980/2018 மற்றும் 2981/2018 இன்படி திரு.S.செந்தில்குமார், த/பெ, திரு.G.சுப்ரமணிக்குச் சொந்தமான சொத்து.
**அட்டவணை "A" சொத்து:** சர்வே எண். 14 பகுதி கொன்னூர் கிராமம், புரசைவாக்கம்–பெரம்பூர் வட்டம், சென்னை மாவட்டத்தில் அமைந்துள்ள முறையே 1883 சதுர அடி மற்றும் 825 சதுர அடி பரப்பளவு உள்ள 39 ஆவது கக்கன்ஜி தெரு, ஜெனரல் குமாரமங்கலம் காலனி, சென்னை 600082 இடத்தில் அமைந்துள்ள மனை எண். 15 பகுதி மற்றும் 16 என்ற காலி நிலத்தின் அனைத்து துண்டு மற்றும் பகுதி (திட்ட அனுமதி எண் PPA/WDC06/13034/2012 மூலம் மூலம் மனை எண் 15–க்காக 15.03.2013 தேதியிட்ட கட்டிட அனுமதி எண் BA/CD06/02020/2013, சென்னை மாநகராட்சி மூலம் அனுமதி பெற்ற மனை மேலும் திட்ட அனுமதி எண் PPA/WDC06/13036/2012 மேலும் மனை எண் 16–க்கு 13.02.2013 தேதியிட்ட கட்டிட அனுமதி எண் BA/CD06/01070/2013): இனம் எண்.1: மனை எண் 15–க்கான அளவீடு மற்றும் எல்லைகள்: வடக்கில்: மனை எண். 13, 14, தெற்கில்: மனை எண் 19, கிழக்கில்: 39 ஆவது தெரு, மனை எண் 15 இன் மீதிப் பகுதி, மேற்கில்: மனை எண் 16. அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்: 22.0 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 22.0 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 37.5 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 37.5 அடி. அனைத்து அளவீட்டின்படி பரப்பளவு 825 சதுர அடி. இனம் எண்.2: மனை எண் 16–க்கான அளவீடு மற்றும் எல்லைகள்: வடக்கில்: மனை எண் 13, கிழக்கில்: மனை எண் 15, தெற்கில்: மனை எண் 17, மேற்கில்: தெரு.அளவீடு –வடக்குப் பக்கத்தில்: 50.0 அடி, தெற்குப் பக்கத்தில்: 52.5 அடி, கிழக்குப் பக்கத்தில்: 37.5 அடி, மேற்குப் பக்கத்தில்: 36.5 அடி. அனைத்தும் அளவீட்டின்படி பரப்பளவு 1883 சதுர அடி.
இனம் எண். 1 இன் பரப்பளவு: 825 சதுர அடி, இனம் எண். 2 இன் பரப்பளவு: 1883 சதுர அடி மொத்தப் பரப்பளவு: 2708 சதுர அடி
அட்டவணை 'B' சொத்து (கொள்முதலாளருக்கு உரிமை மாற்றப்பட்ட நிலம்) கட்டுமான ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டவாறு முழு அறைகலன் வசதியமைக்கப்பட்ட ஃபிளாட்டுன் நிலத்தின் பாகம் பிரிக்கப்படாத பங்கு 200 சதுர அடி பரப்பளவு, அதற்கு தொடர்புடைய அனைத்து உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளுடன் காலி வீட்டு மனையின் அனைத்து துண்டு மற்றும் பகுதி.
அட்டவணை 'C' சொத்து மேற்கூறிய அட்டவணை 'A' குறிப்பிட்ட சொத்தின் பகுதியான தரை தளம், ஃபிளாட் எண் G–3 "ஈடன் கார்டன் அபார்ட்மென்ட்" ஆக அறியப்படும் கட்டிடத்தில் 553 சதுர அடி (பொதுப் பகுதி உட்பட) பரப்பளவு உள்ள சொத்து.

**சொத்து உரிமையாளர் திரு.S.செந்தில்குமார்**

| 13(2) அறிவிப்பு நாள் | **நேரடி சுவாதீனம் நாள்** | **15.09.2026 தேதியின்படி நிலுவைத் தொகை** |
|---|---|---|
| 06.12.2022 | **27.05.2024** | **ரூ.56,51,659/– (ரூபாய் ஐம்பத்து ஆறு லட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து அறுநூற்று ஐம்பத்தொன்பது மட்டும்)** |

| நிர்ணய விலை | **முன்வைப்புத் தொகை – நிர்ணயவிலையில் 10%** | **ஏலம் உயர்த்தும் தொகை** | **சொத்தைப் பார்வையிடும் தேதி மற்றும் நேரம்:** |
|---|---|---|---|
| ரூ.18,50,000/– (ரூபாய் பதினெட்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) | ரூ.1,85,000/– (ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்தைந்தாயிரம் மட்டும் | ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) | அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்கூட்டிய அனுமதியுடன். தலைப்பில் செல்பேசி எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. |

**கணக்கு விவரங்கள்:** **கணக்கு எண்.344905001015, பயனாளரின் பெயர்: ஓம்காரா பிஎஸ்33/2020–21 ட்ரஸ்ட், வங்கியின் பெயர்: ஐசிஐசிஐ பேங்க், கிளை: பிகேசி, மும்பை, IFSC Code:ICIC0003449**

| **மின்–ஏலம் நாள் & நேரம்** | **ஏலம் பங்கேற்புக் கடிதம் / KYC ஆவணம் / முன்வைப்புத்தொகை சான்று சமர்ப்பிக்க கடைசி நாள்** |
|---|---|
| **07 அக்டோபர் 2026 (புதன்கிழமை) பகல் 12.00 முதல் பகல் 01.00 வரை.** | **05 அக்டோபர் 2026 (திங்கள்கிழமை) பிற்பகல் 04.00 மணிக்கு முன்பாக** |

**ஏலம் விதிமுறைகள் & நிபந்தனை: விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டுக் கடனீந்தோர் (ஓஏஆர்பிஎல்) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநர் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பைப் படிக்கவும்.**

**கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு**

இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) விற்பனை முடிவுறும் முன்பு எந்த நேரத்திலும் இங்கே மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகைகளை 16.09.2026 முதலான மேற்கொண்டு வட்டி மற்றும் அனைத்து செலவுகள் கட்டணங்கள் மேலும் செலவினங்களுடன் சேர்த்து செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்பதற்குரிய அறிவுறுத்தலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் மின்–ஏலம் மூலம் ஏலம்/விற்பனை நடைபெறுவது குறித்து அவர்களுக்கு தெரிவிக்கும், கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) மேலும் பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறைகளின் கீழ் 15 (பதினைந்து) நாட்களுக்கு குறைவில்லாத ஒரு கட்டாய அறிவிப்பும் ஆகும். ஒருவேளை பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அதிகாரி/கடனீட்டுக் கடனீந்தோரின் விருப்ப உரிமையில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

**( V M திவாகரன்)**
**கைபேசி எண். 9962333307**
**அதிகாரப்பூர்வ அதிகாரி,**
**ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்.**
**(ஓம்காரா பிஎஸ் 33/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)**

**நாள்: 18.09.2026**
**இடம்: சென்னை**